# திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்.

ந.க.எண். 6522/அ1/2022 நாள். .10.2022

பொருள்: பள்ளிக் கல்வி – கருணை அடிப்படையில் நியமனம் – திருத்தணி கல்வி மாவட்டம்– புச்சிரெட்டிப்பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளி–திருமதி.டி.ரேகா ஜெயஸ்ரீ இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. திருவள்ளூர், மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறை ந.க.எண்.2194/அ1/ 2017–2 நாள்.02.06.2017
2. அரசாணை(நிலை) எண்.80/பள்ளிக்கல்வித் துறை நாள்.02.03.2016
3. அரசாணை(நிலை) எண்.101/பள்ளிக்கல்வித் துறை நாள்.18.05.2018
4. அரசாணை (நிலை) எண்.48/தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021
5. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.21925/ஜே/இ4/2021 நாள்.09.04.2021
6. திருத்தணி, மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண்.0742/அ1/2022 நாள். .06.2022

---

திருவள்ளூர் மாவட்டம், பூனிமாங்காடு, அரசு மேல்நிலைப்பள்யில் ஒவிய ஆசிரியராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 09.07.2009 அன்று காலமான திரு.காசல இந்திரசேனா, என்பவரின் வாரிசுதாரர் திருமதி.டி.ரேகா ஜெயஸ்ரீ என்பவருக்கு பார்வை 1–இல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 05.06.2017 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 4–இல் காணும் அரசாணை பத்தி 5.1 மற்றும் 5.2ல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

(5.2) மேலே பத்தி 5.1ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறைசெய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய

அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

எனவே, தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை–4இல் காணும் அரசாணையின்படியும், பார்வை 6–இல் காணும் மாவட்டக்கல்வி அலுவலரின் பரிந்துரையின் பேரில் திருமதி.டி.ரேகா ஜெயஸ்ரீ, என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 05.06.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

மேற்படி திருமதி.டி.ரேகா ஜெயஸ்ரீ, பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

இணைப்பு–பணிப்பதிவேடு தொகுதி–1 மற்றும் அசல் சான்றிதழ்கள்

12/10/22

முதன்மைக் கல்வி அலுவலர்,
திருவள்ளூர்

12/10/2022

பெறுநர்
சார்ந்த பணியாளர் (உரிய வழியாக)

நகல்
1. சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்
2. சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் (மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)